# களத்தில்

09.08.2001 240

தாயகத்தின் உண்மை நிகழ்வுகளைத் தாங்கிவரும் செய்தித்தாள்


'வன்முறையை மென்முறையால் வெற்றி கொள்ளமுடியாது என்பதை உணர்ந்துகொண்டதால்தான், நாம் வன்முறைப் போராட்டத்தைத் தழுவிக்கொண்டோம்.

தமிழீழத் தேசியத் தலைவர்
மேதகு வே. பிரபாகரன் அவர்கள்



# எரியூட்டப்பட்டவை வெறும் விமானங்கள்தானா...?

**கட்டுநாயக்காவில் சிறீலங்கா விமானப்படைக்குச் சொந்தமான நவீன யுத்தவிமானங்கள், வெடிபொருள் களஞ்சியங்கள், ஆயுதக்கிடங்குகள், என்பன மட்டும் தான் எரிந்து கரிகினவா? இல்லை என்பதே யதார்த்தம். அதன் இராணுவவாதத் திமிர் மீதும், இனவாதத் திமிர் மீதும் கூடவே அதன் பொருளாதார, அரசியல் கட்டுமாணங்களின் மீதும் அடிவிழுந்திருக்கின்றது.**



மிகையொலித் தாக்குதல் விமானங்களான மிக்-27 விமானங்கள், கிபிர் விமானங்கள், தாக்குதல் வானூர்திகள், பயிற்சி விமானங்கள் மற்றும் சிறிலங்கன் ஏயாலைன்ஸ் நிறுவனத்தின் விமானங்கள் என பதினான்கு விமானங்களே அழிக்கப்பட்டதாக முன்னர் தெரிவிக்கப்பட்டபோதும், தற்போது அழிக்கப்பட்ட சேதமாக்கப்பட்ட விமானங்களின் எண்ணிக்கை இருபத்தியேழிற்கும் மேல் என தற்போதைய செய்திகள் தெரிவிக்கின்றன. இழக்கப்பட்ட விமானங்களின் எண்ணிக்கை பற்றிய விபரங்கள், தற்போதுதான் மெல்ல மெல்ல வெளிவரத் தொடங்கியிருக்கின்றன.

தாக்குதலின் பரிமாணம், அழிக்கப்பட்ட விமானங்களின் எண்ணிக்கையில் தற்போது தங்கியிருக்கவில்லை.

கட்டுநாயக்கா மீதான விடுதலைப் புலிகளின் மிகத்துணிச்சலான, நுணுக்கமான திட்டமிடலுடன் மேற்கொள்ளப்பட்ட, பாரிய தாக்குதல், சிங்களத்தின் உச்சிமீது விழுந்த பெரும் இடி என்பதில் சந்தேகமில்லை.

கோடி கோடியாய் கொட்டி, தனது பாதுகாப்புப் படையினரை பலப்படுத்திவரும் சிறிலங்கா அரசுக்கு இந்த அடி மாபெரும் அவமானம் என்பதில் சந்தேகமில்லை. ஒவ்வொரு ஆண்டும், தனது பாதுகாப்புச் செலவீனத்தை அதிகரித்து, அதற்கு ஒதுக்கப்படும் தொகையை, எவ்வித எதிர்ப்பும் இன்றி சிங்களப் பாராளுமன்றத்தின் முழுமையான ஆசீர்வாதத்துடன் அதிகரித்துவரும் சிங்களப் பேரினவாத அரசு, தமிழர் தாயகத்தின் மீது தனது இராணுவக் கடும்கோட்பாட்டுக் கொள்கையை, திணித்துவருகின்றது.

ஆனால், அதன் பாதுகாப்பு மையத்தில், அதன் பொருளாதார இயக்க மையத்தில், அதன் கௌரவத்திற்கான தளத்தில், இந்தத் தாக்குதல் நடந்திருப்பது, அதற்கு மிகமோசமான அவமானமாகிவிட்டது.

கட்டுநாயக்கா தாக்குதலானது, சிங்கள தேசியம் சந்தித்திருக்கின்ற, இலங்கை அரசு சந்தித்திருக்கின்ற, இலங்கை இராணுவம் சந்தித்திருக்கின்ற மிக மோசமான பின்னடைவு மட்டுமல்ல, மிகப் பெரிய பேரழிவு என்பதை, சிங்களத் தரப்புக்கூட வெட்கம் விட்டு ஒத்துக்கொள்ளுகின்றது.

தமிழர்களுக்கு எதிரான சிங்கள அரசின் மோசமான இனஅழிப்புப் போரை வரவேற்று ஆதரிக்கும் சிங்களப் பேரினவாதிகள், இந்தத் தாக்குதல் குறித்து சந்திரிகா அரசை குறை கூறிவருகின்றனர். விடுதலைப் புலிகளுடன் பேசவோ, சமாதானத் தீர்வை நாடவோ கூடாது என வலியுறுத்தும் சிங்களப் பேரினவாதிகள், தமிழர் தாயகத்தின் மீதான தாக்குதலின் எதிரொலியே இவை என்பதை எண்ணிப்பார்க்க மறுக்கின்றனர்.

பல ஆயிரம் கோடி ரூபாய்களை பாதுகாப்புச் செலவீனமாக ஒதுக்கி, யுத்தத்தை நவீனமயப்படுத்தி நடத்திவரும் சந்திரிகா அரசைப் பாராட்டும் பௌத்த சிங்களப் பேரினவாதிகள், சிங்களத்தின் தலைநகரில் அதியுச்ச பாதுகாப்புக் கொண்ட பகுதியில் விடுதலைப் புலிகளால் எப்படி உள்நுழைந்து, நாட்டை அதிர்ச்சிக்கும் ஆட்டத்திற்கும் உட்படுத்தியிருக்கும் பெரும் தாக்குதலை எப்படி நடத்த முடிந்திருக்கும் எனக் கேள்வி கேட்கின்றனர்.

இந்தப் பாதுகாப்பு ஏற்பாட்டுக் குறைபாட்டிற்கு அவர்கள் சந்திரிகா அரசையே குற்றஞ்சாட்டுகின்றனர்.

'சிறிலங்காவின் தேசிய உளவியல் கட்டுமானத்தின்மீதும், இராணுவ உளவியல் கட்டுமானத்தின்மீதும், அரசியல் உளவியல் கட்டுமானத்தின்மீதும் இத்தாக்குதல் பேரழிவை ஏற்படுத்தியிருக்கின்றது' என்கின்றார், அருட்தந்தை ஜோசப் கஸ்பார் அடிகளார்.

'விடிவு வராதா? சிங்கள இராணுவத்தின் இனவாதத்திமிர் அடங்காதா? என்று அங்கலாய்த்துக் கொண்டிருக்கின்ற தமிழ் மக்களுக்கு, நிச்சயமாக தமிழீழ தேசியம் தன் இலக்கைச் சாதிக்கும், இலக்கை வெல்லும் என்கின்ற நம்பிக்கையை இந்தத் தாக்குதல் தந்திருக்கின்றது' என்கின்றார் அவர்.


உள்ளே...உள்ளே...உள்ளே...உள்ளே...உள்ளே...உள்ளே...உள்ளே...உள்ளே...உள்ளே...உள்ளே...உள்ளே...உள்ளே...உள்ளே...உள்ளே...உள்ளே

**தளம்பும் சிறிலங்கன் விமானச் சேவையும் உல்லாசப்பயணத்துறையும்**

கட்டுநாயக்கா தாக்குதல் நமக்கு பெரும் இழப்பை ஏற்படுத்தியுள்ளது. இத்தாக்குதலால் நாம் எமது வான் கலங்களை இழந்திருக்கின்றோம் கூடவே எமது பொருளாதாரத்தையும் இழந்து விட்டோம். 4

**ஆட்சியைத் தக்கவைக்க ஜனநாயகத்திற்கு சாவுமணி அடிக்கும் சந்திரிகா!** 11

1. சிறிலங்காவின் பாராளுமன்றின் அதிகார எல்லைகள் என்ன?
2. சிறிலங்காவின் அரசியல் யாப்புப் பேரம் முக்கியத்துவம் என்ன?

**"தமிழீழத் தேசியம் சாதிக்க மகத்தான சாதனை"**

விடிவுவராதா? சிங்கள இராணுவத்தின் திமிர் அடங்காதா? என்று அங்கலாய்த்துக் கொண்டிருக்கின்ற தமிழ் மக்களுக்கு நிச்சயமாக தமிழீழ தேசியம் தன் இலக்கை சந்திக்கும், இலக்கை வெல்லும் என்கின்ற நம்பிக்கையும் பரவலாக இந்தத் தாக்குதல் தந்திருக்கின்றது. 2


**புலிகளின் தாகம் தமிழீழத் தாயகம்**

# கட்டுநாயக்கா விமானத்தளம் தாக்குதலுக்கு உள்ளான அன்று (24.07.2001) விடுதலைப் புலிகளின் குரல் வானொலி வழங்கிய செய்தி



MI-17ரக உலங்குவானூர்தி

சிறிலாங்கா அரசினதும் முப்படைகளினதும் இதயம்போன்ற சிறிலங்கா வான்படையின் பிரதானமையத் தளத்திலுள் இன்று அதிகாலை முதல் முற்பகல் வரை விடுதலைப் புலிகள் மேற்கொண்ட துணிகர ஊடுருவல் தாக்குதலில் சிறிலங்கா வான்படையின் 8 வானூர்திகளும் 3 போக்குவரத்து வானூர்திகளும் முற்றாகதகர்க்கப்பட்டுள்ளன 3போக்குவரத்துவானூர்திகள் கடுமையான சேதம்அடைந்துள்ளன. செய்தி ஊடகங்கள் தரும் தரவுகளின்படி விடுதலை புலிகளின் அணி ஒன்று ஊடுருவல் நடவடிக்கை ஒன்றை மேற்கொண்டு உச்ச பாதுகாப்புகளை கொண்ட கட்டுநாயக்க விமானப்படைதளத்தில் நுழைந்து அங்கு இன்று அதிகாலை 3.25மணி அளவில் தாக்குதலை தீவிரமாக ஆரம்பித்தனர். விமானப்படையின் அதியுயர் தாக்குதல் வலுகொண்ட வானூர்திகளின் தரிப்பிடத்தின் மீது முதலில் தாக்குதலை விடுதலைப் புலிகள் நடத்தினர். இன்று காலை 7.30க்குள் தரிப்பிடத்தில் நின்ற 8வானூர்திகள் தாக்கப்பட்டு எரியூட்டப்பட்டன. இதில் 8 வானூர்திகளும் தகர்ந்துபோயின. அதனுடன் எரிபொருள் தாங்கியும் எரியூட்டப்பட்டன. மிக்27ரக மிகையொலி வேகத் தாக்குதல் விமானம் ஒன்று, கிபிர் மிகையொலி வேகத் தாக்குதல் விமானங்கள் இரண்டு, MI-24ரக தாக்குதல்வானூர்தி ஒன்று, MI-17ரக படைக்காவி வானூர்தி ஒன்று, A 8 பயிற்சி விமானங்கள் மூன்று என்பன அழிக்கப்பட்டவையாகும்.

நாற்பது ஏக்கர் பரப்பளவில் சுற்றிவர கம்பி வேலிகள் அமைக்கப்பட்டு பல பாதுகாப்புவலையங்களைக் கொண்ட கட்டுநாயக்க விமானப்படைதளத்திலுள் காலை 5.30 மணி தாண்டிய பின்னரும் விடுதலைப் புலிகளின் அணியினர் தாக்குதலை தொடர்ந்தனர் என செய்திஊடகங்கள் தெரிவிக்கின்றன காலை 8.30மணி அளவில் எரிபொருள் தாங்கி ஒன்றின் அருகே தாக்குதல் நடத்தியவர்களில் ஒருவர் நின்றுகொண்டிருந்ததாகவும் அவரை நோக்கி சிறிலங்கா படையினர் முன்னேறியபோது எரிபொருள் தாங்கியை அவர் தகர்த்ததாகவும் அக்காட்சியை நேரில்கண்ட ஒருவர் தெரிவித்துள்ளார்.

விமானபடைத்தளத்திலுள் வான் மிகைபொலி தாக்குதல் விமானங்களையும் எரிபொருள் தாங்கியையும் தகர்த்த அணியினர் ஓடுபாதையில் நின்றிருந்த சிறிலங்கன் ஏயர்லைன் விமான நிறுவனத்துக்கு சொந்தமான ஆறு ஏயர்பஸ் வகை இத்தாலிய போக்குவரத்து விமானங்களையும் தாக்கியுள்ளனர் இத்தாக்குதல்களில் மூன்று விமானங்கள் எரிந்து முற்றாகஅழிந்துள்ளன மூன்று விமானங்கள் எரிந்து கடுமையாக சேதம் அடைந்துள்ளன. இந்த ஏயர்பஸ் ஒவ்வொன்றும் 100மில்லியன் அமெரிக்க டொலர் பெறுமதியானவையாகும். விமான படைத்தளத்திலுள் விடுதலைபுலிகளின் அணியினர் முற்பகல் வரை தாக்குதலை தொடர்ந்ததாகவும் கடைசியாக அவர்களில் ஒன்பதுபேரின் உடல்களை படையினர் கைப்பற்றியதாகவும் ஏனையோர் தப்பிவிட்டதாகவும் அவர்களை கண்டால் தமக்குக் காட்டித்தருமாறும் சிறிலங்கா அரசு ஊடகங்களுக்கூடாக அடிக்கடி கோரிக்கையை விடுத்தபடியுள்ளது.

இத்தாக்குதல் துணிகரமாக பலமணி நேரம் சிறிலங்கா அரசின் பிரதான உச்ச பாதுகாப்புக் கோட்டையினுள் நடத்தப்பட்டுள்ளது.



MIG-27 ரக போர்விமானம்

கறுப்புஜூலை நாட்களையொட்டி அதியுச்ச பாதுகாப்புநடவடிக்கைகள் கொழும்பில் மேற்கொள்ளப்பட்டிருந்த நிலைமையில் இத்தாக்குதல் நடத்தப்பட்டிருக்கின்றது. சிறிலங்காவின் பாதுகாப்பு ஏற்பாடுகளை இது கேள்விக்குறியாக்கியுள்ளது பெரும் நெருக்கடிகளை சந்திரிக்கா அரசு சந்தித்துக்கொண்டிருக்கும் நிலையில் இத்தாக்குதல் நடத்தப்பட்டிருக்கின்றது இந்த தாக்குதல் சிறிலங்காவின் தலைநகர் கொழும்பின் பாதுகாப்பு கேள்விக்குறியாக்கியுள்ளதுடன் அதற்குபொருளாதார அடியையும் கொடுத்துள்ளது என செய்திஊடகங்கள் தெரிவிக்கின்றன அழிக்கப்பட்ட 3ஏயர் பஸ்விமானங்களும் பல 100மில்லியன் டொலர் பெறுமதியாகும். இந்த மூன்று ஏயர்பஸ் விமானங்களின் இழப்பால் சிறிலங்கா அரசிற்கு 3000கோடிரூபாவிற்குமேல் இழப்புஏற்பட்டுள்ளது. சேதமான ஏயர்பஸ்விமானத்தின் இழப்புதொகை இதில் இணைக்கப்படவில்லை. சிறிலங்கா வான்படை வானூர்திகளின் இழப்பு பெறுமதியின் தொகை 18 மில்லியன் அமெரிக்கடொலர் என படைவட்டாரங்கள் தெரிவிக்கின்றன. மிக குறுகிய நேரத்தில் சிறிலங்கா வான் படை சந்தித்த மிகப் பெரும்இழப்பு இதுவாகும். அத்துடன் குறுகிய நேரத்தில் சிறிலங்கா அரசு பல ஆயிரம்கோடி ரூபாக்களை இழந்துள்ளதும் இந்த தாக்குதலில் ஆகும். இது சிறிலங்கா அரசின் பொருளாதாரத்தை மிகமோசமாக பாதிக்கும் ஒன்றாகும். இதேவேளையில் சிறிலங்கா அரசின் பாதுகாப்பு நம்பிக்கைகள், உத்தரவாதங்களை இத் தாக்குதல் தகர்த்துள்ளது.

சீரழிக்கப்பட்ட கட்டுநாயக்க விமானப்படைதளத்தின் ஒருபகுதிமட்டும் செய்தியாளர்கள் பார்வையிட சிறிலங்கா அரசு அனுமதித்துள்ளது. செய்மதிஊடாக தொடர்பு ஊடகங்கள் காண்பித்த விமானத்தள காட்சிப்படங்களும், கட்டுநாயக்கா விமானத்தளமும் சீரழிக்கப்பட்டதாக உள்ளன. எரிந்தும் புகைமண்டலங்களாகவும் விமானப்படைத்தளம் காணப்படுகின்றது விமானங்கள் எரிவதும் உடைந்து கிடப்பதுமாக விமானஓடுதளம் காட்சியளிக்கின்றது தீயணைப்புப் படையினர் தீயை அணைக்கும் நடவடிக்கையை தொடர்ந்த போதும் அங்குபெரும் கரும்புகையே பெருமளவில் காணப்படுகின்றது. சிறிலங்காவிமானப்படைத்தளம்மீதான தாக்குதல் தொடர்பாக கருத்துதெரிவித்த சிறிலங்காவின் இராணுவ ஆய்வாளர் இக்பால் அத்தாஸ், விடுதலைப்புலிகள் அணி எவ்வாறு எந்தவழியால் விமானப்படைத்தளத்திலுள் நுழைந்தது என்பது படையினரால் இது வரை கண்டுபிடிக்கமுடியவில்லை எனவும் அவர்களில் எத்தனை பேர்இருந்தார்கள் என்பது தெரியாது எனவும் தெரிவித்துள்ளார். இத்தாக்குதல் சிறிலங்காவின் உயர் பாதுகாப்பை கேள்விக்குறியாக்கி உள்ளதாகவும் அத்தாஸ் தெரிவித்துள்ளார். சிறிலங்காவின் வான்படை விமானங்கள் நடத்தி வந்த அட்டூழியங்களால் பாதிப்புற்ற தமிழ் மக்கள் விடுவிக்கப்பட்ட தாயகப்பகுதிகளில் எங்கும் வான்படைவிமானங்கள் அழிக்கப்பட்டதை இனிப்புபொருட்களை பரிமாறி தமது மகிழ்ச்சியை பகிர்ந்துகொண்டனர். குறிப்பாக வன்னிப்பகுதி எங்கும் மக்கள் மகிழ்ச்சி ஆரவாரம் செய்தவண்ணம் உள்ளனர். இனிப்புபொருட்கள் பரிமாறுவதை எங்கும் பார்க்கும் வண்ணமாக உள்ளது. சிறிலங்காவின் வானூர்திகள் தமிழ்மக்கள் மீது புரிந்துள்ள அட்டூழியங்கள் நினைவூட்டத்தக்கதாகும். நவாலித் தேவாலயத்தில் சில நிமிடநேரத்தில் 122அப்பாவிமக்களை பலி கொண்டமை, நாகர்கோவில் பாடசாலையில் 30க்கும் அதிகமான மாணவர்களை பலி கொண்டமை, யாகப்பர் ஆலயத்தில்10க்கும் அதிகமான அப்பாவிமக்களை பலி கொண்டமை, வயலிக்குள தேவாலய படுகொலை, அரியாலை நாவலடி கிராமப் படுகொலை, சாவகச்சேரி நகரம் மற்றும் சங்கத்தானை படுகொலை, மந்துவில்படுகொலை, நாச்சிக்குடா படுகொலை, சுதந்திரபுரம் படுகொலை உட்பட பல ஆயிரம் தமிழ்மக்களை சிறிலங்கா வான் படைவானூர்திகள் குண்டுகளை வீசி கொன்றுகுவித்தது குறிப்பிடத்தக்கது.

கட்டுநாயக்கவிமானப்படைத்தளத்தின் மீதான இன்றைய தாக்குதலில் அழிக்கப்பட்ட மிக்-27ரக மிகையொலி விமானம் கடந்த ஆண்டு ஆகஸ்ட்மாதத்தில் சிறிலங்கா வான்படையால் உக்ரேனில் இருந்து கொள்வனவு செய்யப்பட்டதாகும். சிறிலங்கா வான்படையிடம் உள்ள உயர் வலு முதன்மை தாக்குதல் வானூர்தியாக மிக்- 27 விளங்குகின்றது. பரசூட் மூலம் இந்த விமானம் வீசும் குண்டுகள் அதிகளவு இலக்குத் தவறாதவை என உத்தரவாதம் பெற்றவை ஆகும். தற்போது சிறிலங்கா படைபலத்தின் பின்பலமாக மிக்- 27 விமானங்கள் விளங்குகின்றன. முல்லைத்தீவு கரையோரத்தில் இவ் விமானம் தனது ஒத்திகை தாக்குதலை கடந்த ஆண்டு ஆகஸ்டில் நடத்தியது தனி ஒருநபரின் இருக்கை கொண்டதாகவும், இது ஒலியின் 2.5மடங்கு வேகம் உடையதாகவும், 23மி.மீ பீரங்கி ஏவுகணை செலுத்துகை வசதிகள் கொண்டதாகவும் வேவுபார்க்கும் படம்பிடிக்கும் வசதி கொண்டதாகவும் மிக்27 விமானம் உள்ளது.

வான்படையின் கிபிர் விமானங்கள் 1992ம் ஆண்டில், சிறிலங்கா வான்படையால் இஸ்ரேலிடம் இருந்து கொள்வனவு செய்யப்பட்டன. இதில் ஒன்று 1997ஆம் ஆண்டு நீர்கொழும்புக் கடலில் வீழ்ந்து அழிந்தது. 2000ம், 2001ம் ஆண்டுகளில் கிபிர் ஏவுகணை விமானங்களை சிறிலங்கா விமானப்படை கொள்வனவு செய்தது. சிறிலங்கா வான் படையில் மிக் 27க்கு அடுத்தபடியான நிலையில் கிபிர் விமானங்கள் உள்ளன. கிபிர் விமானங்கள் ஒலியின் 1.5மடங்கு வேகமானவை. வான்படையின் MI-17 வானூர்திகள் அதன் உபயோக போரியல் போக்குவரத்து வானூர்தியாகும்.

1993ம் ஆண்டு கொள்வனவு செய்யப்பட்ட ரஸ்சியத் தயாரிப்பான MI-17 வானூர்திகள் சிறிலங்காப் படைகளுக்கு இராணுவத்தினரைக் காவவும் போர் முனைச் செயற்பாடுகளுக்கும் பிரதான ஆதாரபலமாக உள்ளன.

அழிக்கப்பட்ட மூன்று A 8 பயிற்சி விமானங்கள் அண்மையில் சிறிலங்கா வான்படையால் சீனாவிடம் இருந்து கொள்வனவு செய்யப்பட்டவையாகும்.



MI-24 ரக உலங்குவானூர்தி







# சிங்களத்தின் குகைக்குள் வீரப்புலிகள்












எங்கள் ஊர் எரித்து
உயிர்பறித்த சிங்களத்து
வான்அரக்கர் உயிர்
பிளந்து கிடப்பது பாரீர்!













# புலிகளின் வீரமும் சிங்களத்தின் அவலமும்

## Sri Lanka Air Force



Mi-17 Helicopters



K-8 Jets



Mig 27



Kfir Jets

## Sri Lankan Airlines




A-340 destroyed




A-330s destroyed

தமிழீழ ஆவணக்காப்பகம்
Tamileelam Archive

## கட்டுநாயக்கா தாக்குதலில் சிறீலங்கா இழந்த விமானங்களின் விபரம்

இறுதியாகக் கிடைத்த தகவல்களின் படி, சிறீலங்கா விமானப் படையினரும், சிறீலங்கா 'எயர் லைன்ஸ்' நிறுவனத்தினதும் விமானங்களில் 27 விமானங்கள் தாக்குதலுக்குட்பட்டு அழிந்தும், செயலிழந்தும் போயுள்ளன.

### அழிக்கப்பட்ட விமானப்படை விமானங்கள்

| | |
|---|---|
| கிபிர் | 4 |
| மிக் 27 | 2 |
| எம்.ஐ. 24 | 1 |
| எம்.ஐ.17 | 1 |
| கே.8 பயிற்சி விமானம் | 3 |
| பெல். 412 | 2 |
| அன்ரனோவ் | 1 |

### சேதமாக்கப்பட்டவை

| | |
|---|---|
| கிபிர் | 4 |
| பெல்-412 | 1 |
| ஜனாதிபதி மற்றும் முக்கிய பிரமுகர்கள் பயன்படுத்தும் உலங்குவானூர்தி | 2 |

### அழிக்கப்பட்ட 'எயர் லைன்ஸ்' விமானங்கள்

| | |
|---|---|
| A- 340 - | 2 |
| A- 330 - | 1 |
| A- 320 - | 1 |

இவற்றுடன் மேலும் இரு பயணிகள் விமானங்கள்